Thurgau



# துர்காவ் மாகாணத்தில்

# கல்வி சார்ந்த வாய்ப்புகள்

# பொருளடக்கம்

பக்கம்

மிக முக்கியமானவற்றின் சுருக்கம் 4

ஆரம்ப குழந்தை பருவ கல்வி 5

தொடக்கப்பள்ளி 6
(மழலையர் பள்ளி, முதனிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி)

இணைப்பு பயிற்சி ஏற்பாடுகள் / ஒருங்கிணைப்பு படிப்புகள் 8

தொழில்ரீதியான அடிப்படைக்கல்வி 10
- கூட்டரசு தொழிற்கல்வி இளநிலை பட்டப்படிப்பு
- கணிதம் மற்றும் கணினி கல்லூரி
- மாகாணக் கல்வி

இளங்கலை பள்ளிகள் 11
- இடைநிலைப் பாடசாலையின் இளங்கலை பள்ளிகள்
- துர்காவ்-ஷாஃப்ஹவுசர் பெரியவர்களுக்கான இளங்கலை பள்ளி
- பசரெல் (தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கான துணைத் தேர்வு)
- தொழில்நுட்ப பள்ளி மற்றும் சிறப்பு மேல்நிலைப் பள்ளி டிப்ளமோ

உயர் தொழிற்கல்வி 12
- கூட்டாட்சி தேர்வுகள்
  தொழில்முறை தேர்வுகள் BP
  உயர் தொழில்முறை தேர்வுகள் HFP
- உயர் தொழில்நுட்ப பள்ளிகள்
- மற்ற உயர் தொழில்நுட்ப பள்ளிகள்

பல்கலைக்கழகங்கள் 13
- துர்காவ் கல்வி பல்கலைக்கழகம்
- பிற பல்கலைக்கழகங்கள்

மேற்படிப்பு 14

கல்வியின் அனைத்து நிலைகளுக்கும் அதனுடன் கூடிய ஒதுக்கீடுகள் 14
- பெற்றோர் கல்வி
- பள்ளி உளவியல் மற்றும் பேச்சுப் பிறழ்வு சிகிச்சையியல்
- தொழில் மற்றும் கல்விக்கான ஆலோசனை
- கன்டோனல் அல்லாத பள்ளிகளுக்கான பயிற்சி மானியங்கள் மற்றும் பங்களிப்புகள் 15
- கூடுதல் தகவல் மற்றும் தொடர்பு புள்ளிகள்

பதிவு

ஆசிரியர்
கல்வி மற்றும் கலாச்சாரத் துறை

2023 பதிப்பு

இச் சிற்றேடு அல்பேனிய மொழி, அரபு, ஆங்கிலம்,

பிரஞ்சு, இத்தாலியன், போலிஷ், போர்த்துக்கீச மொழி, செர்போ-குரோஷியன்,

ஸ்லோவாக், ஸ்பானிஷ், தமிழ், துருக்கியம், ஹங்கேரியன் மற்றும் யூக்ரேனிய மொழி
ஆகிய மொழிகளில் கிடைக்கிறது.
dek.tg.ch → Publikationen und Downloads → Bildung

பிரசுரிப்பாளர்
கல்வி மற்றும் கலாச்சாரத் துறையின் தலைமைச் செயலகம்
தொடக்கப்பள்ளி அலுவலகம்
இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான அலுவலகம்
தொழில் பயிற்சி மற்றும் தொழில்நெறி வழிகாட்டலுக்கான அலுவலகம்

கருத்து மற்றும் வடிவமைப்பு
Joss – visuelle Kommunikation, Weinfelden

டிஜிட்டல் சிற்றேடுக்கான QR இணைப்பு

"துர்காவ் மாகாணத்தில் கல்வி சார்ந்த வாய்ப்புகள்"

குறிப்பு
துண்டறிக்கைகள், விளக்க காணொலிகள் அல்லது இணையதளத்தில் உள்ள கூடுதல் தகவல்களுக்கான இணைப்புகள் 🔗 மூலம் அல்லது அடிக்கோடிட்டுக் குறிக்கப்படும்.
உங்கள் உலாவியில் இணையதளங்களுக்கான இணைப்புகளை கைகளால் உள்ளிட விரும்பினால், உலாவியைப் பொறுத்து, இணையதளம் திறக்க, இணைப்பின் முன் "www."ஐச் சேர்க்க வேண்டும்.



## முன்னுரை

அன்பான பெற்றோர்களே,
அன்புள்ள ஐயா அல்லது அம்மா,

குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு, தங்கள் பள்ளி வாழ்க்கையின் முதல் இரண்டு தசாப்தங்கள் மிக முக்கியமான கட்டங்களாகும். பள்ளி, ஆசிரியர்கள், வகுப்பிலுள்ள சக மாணவர்கள் மற்றும் மாணவிகள் - அவர்கள் அனைவரும் குழந்தைப் பருவத்திலும் இளமைப் பருவத்திலும் முதிர்வயது வரை முக்கியமானவர்கள் மற்றும் தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள். இதை நாங்கள் அறிந்ததால், உங்கள் பிள்ளைக்கு ஆலோசனை வழங்கவும், அவர்களின் பள்ளி வாழ்க்கை முழுவதும் அவர்களுடன் துணையாக செல்லத்தக்கதாக, துர்காவ் மாகாணத்திலுள்ள கல்வி முறையைப் பற்றி நீங்கள் விரிவாக அறிந்து வைத்திருப்பது எங்களுக்கு முக்கியம். இந்தச் சிற்றேடு, துர்காவ்வின் கல்விச் சூழலில் உங்கள் வழியைக் கண்டறிய உதவும் வழிகாட்டியாகச் செயல்படும்.

ஒரு பெற்றோராக, உங்கள் பிள்ளையின் பள்ளி வருகைக்கு வரும்போது நீங்கள் ஒரு முக்கிய பங்கு வகிக்க வேண்டும். பள்ளி மற்றும் பெற்றோர் இடையே நல்ல ஒத்துழைப்பு இருப்பதே பள்ளி வெற்றிக்கு ஒரு முக்கிய படியாகும்.

துர்காவ் கல்வி முறையைப் பற்றிய தகவல்கள் மட்டுமல்லாமல், இந்த சிற்றேட்டில் மற்ற தகவல்கள் மற்றும் படிப்புகளைப் பற்றிய பல குறிப்புகளும் உள்ளன. நீங்கள் இதில் ஆர்வம் கொண்டிருந்தாலோ அல்லது நீங்கள் அவற்றைப் பயன்படுத்தினாலோ நாங்கள் மகிழ்ச்சி அடைவோம்.

கன்டோனல்(அரசு) கவுன்சில் உறுப்பினர்
மோனிக்கா க்னில்

## மிக முக்கியமானவற்றின் சுருக்கம்

தொடக்கப் பள்ளியில் சேருவது கட்டாயமானது மற்றும் உட்கி பதினொரு ஆண்டுகள் நீடிக்கும். துர்காவ் மாகாணத்தில் வசிக்கும் அனைத்து குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு அரசாங்கப் பள்ளியில் இலவசமாக படிப்பார்கள்.

குழந்தைகள் இரண்டு வருட மழலையர் பள்ளியில் படிப்பதுடன் கட்டாயப் பள்ளிப் படிப்பைத் தொடங்குகிறார்கள். பின்னர் அவர்கள் முதல்நிலைப்பள்ளியில் ஆறு ஆண்டுகளுக்கும் மேல்நிலைப் பள்ளியில் மூன்று ஆண்டுகளுக்கும் (இரண்டாம் நிலை I) படிக்கிறார்கள். அதன் பிறகு கட்டாயப் பள்ளிப்படிப்பு முடிந்துவிட்டது.

பின்னர், இரண்டாம் நிலை II இல் இளைஞர்களுக்கு பல்வேறு விருப்பத் தேர்வுகள் உள்ளன. அவர்கள் தேர்ந்தெடுத்த தொழிலை செய்ய தகுதிப்படுத்துகிற ஒரு தொழிற்பயிற்சியை துர்காவ்வில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு இளைஞர்கள் செய்துமுடிக்கிறார்கள். தொழில் பயில்வு மட்டுமல்லாமல், உயர் செயல்திறன் கொண்ட இளைஞர்கள் ஒரு தொழிற்கல்வி இளங்கலைப் படிப்பைப் பெறலாம், இதன் மூலம், பல்கலைக்கழகத்திற்கு (மூன்றாம் நிலை) நேரடியாக செல்ல நுழைவுரிமை பெறலாம்.

மூன்றில் ஒரு பங்கு இளைஞர்கள் மேல்நிலைப் பள்ளி II மட்டத்தில், முறைப்படியாக உயர்நிலை பள்ளியில் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்று வருகின்றனர், இது அவர்களை மூன்றாம் நிலை தொழிற்பயிற்சி வகுப்புகளுக்குத் தயார்படுத்துகிறது.


ஒரு தொழில் பயில்வு, ஒரு தொழிற்கல்வி இளங்கலை அல்லது ஒரு உயர்நிலை பள்ளி அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் பள்ளிக் கல்வி முடிந்ததா என்பதைப் பொறுத்து, இரண்டாம் நிலை II இலுள்ள தகுதியுடன், பல்வேறு பல்கலைக்கழகங்களில் மூன்றாம் நிலையில் சேர்ந்துக் கொள்ளலாம்.

## கல்வி முறையின் அதிக ஊடுருவுதிறன்

சுவிட்சர்லாந்தின் கல்வி முறையானது அதிக அளவிலான ஊடுருவக்கூடிய தன்மையால் வேறுபடுத்தப் படுகிறது: ஒரு தொழிற்பயிற்சி அல்லது பள்ளிக்கு நுழைவதற்கு அல்லது மாற்றுவதற்கு அல்லது ஒரு தொழிற்பயிற்சியை வேறொரு சமயத்தில் மீண்டும் செய்து முடிப்பதற்கு பல்வேறு வழிகள் உள்ளன.

Das Bildungssystem im Kanton Thurgau - YouTube

## துர்காவ் கல்விமுறை ஒரு பார்வையில்



# குழந்தை பருவ ஆரம்ப கல்வி

ஒரு உகந்த தொடக்கத்தை சாத்தியமாக்குதல்

பெற்றோர்கள்களுக்கு தங்கள் குழந்தைகளை வளர்ப்பபதே முதன்மையான பொறுப்பாகும். ஆரம்பகால கல்விக்கான முதல் மற்றும் மிக முக்கியமான இடம் அவர்களது குடும்பமாகும். குடும்ப அங்கத்தினர்களின் அன்றாட வாழ்க்கையில், குழந்தைக்கு விளையாடும் போது அல்லது நடமாடும் போது மற்றவர்களுடன் சேர்ந்து கற்க அருமையான வாய்ப்புகள் கிடைக்கின்றது.

குழந்தைகள் பிறப்பிலிருந்தே, திறமையாகவும், சுறுசுறுப்பாகவும், ஆர்வமாகவும் இருக்கிறார்கள். அனுபவத்தின் மூலம், உறவுகள் மூலம் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக மற்ற குழந்தைகளுடன் விளையாடுவதன் மூலம் அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

ஆரம்ப குழந்தை பருவ கல்வியின் வாய்ப்பின் மூலம் தேவைப்பட்டால் சிறு குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்கள் ஆதரிக்கப்படுகின்றனர். எ.கா. மருத்துவச்சிகள், குழந்தை மருத்துவர், தாய் மற்றும் தந்தையர்களுக்கான ஆலோசனை, பெற்றோர் கல்வி மற்றும் விளையாட்டுக் குழுக்கள், பகல்நேர பராமரிப்பு மையங்கள் (கிடாஸ்) அல்லது பகல்நேர பராமரிப்பு குடும்பங்கள் இவற்றில் அடங்கும்.

சலுகைகள்/தொடர்பு
நீங்கள் வசிக்கும் சமூகத்திடமோ அல்லது உங்கள் பள்ளியிலோ சலுகைகளைப் பற்றி கேளுங்கள்.

- ஆலோசனை: perspektive-tg.ch / conexfamilia.ch
- பெற்றோர் கல்வி: elternwissen-tg.ch
- பல்வேறு சலுகைகள்: sozialnetz.tg.ch

பன்மொழி
உங்கள் குழந்தை பன்மொழி பேசி வளர்ந்தால்: உங்கள் குழந்தையுடன் உங்களது வலுவான மொழியில் பேசினால், உரையாடல்களை வளமாகவும், கலகலப்பாகவும் மாறும். அதே நேரத்தில், மழலையர் பள்ளியில் சேர்வதற்கு குழந்தைக்கு ஜெர்மன் மொழி அறிவு தேவை. உங்கள் பிள்ளைக்கு ஜெர்மன் மொழி பேசும் சகாக்கள் மற்றும் பெரியவர்களுடன் கூடிய விரைவில் தொடர்பு கொள்ள வாய்ப்பளிக்கவும். விளையாட்டுக் குழுக்கள் அல்லது பகல்நேர பராமரிப்பு மையங்கள் ஜெர்மன் மொழியைக் கற்க சிறந்த இடங்களாகும்.

மேலும் தகவலுக்கு, இங்கே பார்க்கவும்:
elternwissen-tg.ch → Das können Eltern tun → Sprich mit mir

தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டாய மழலையர் பள்ளிக்கான மொழி ஆதரவு
அனைத்து குழந்தைகளுக்கும் மழலையர் பள்ளியில் ஒரு நல்ல தொடக்கத்தை வழங்குவதற்காக, துர்காவ் மாகாணம் 2024 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டாய மழலையர் பள்ளிக்கான மொழி ஆதரவை அறிமுகப்படுத்தியுள்ளது. மொழிப் புரிதல் என்பது மற்ற குழந்தைகள் அல்லது பெரியவர்களுடன் தொடர்புகொள்வதற்கும் படிப்பதில் வெற்றிக்கும் ஒரு மையப் பகுதியாகும்.

போதிய ஜெர்மன் அறிவு இல்லாத குழந்தைகள், மழலையர் பள்ளியில் சேர்வதற்கு ஒரு வருடத்திற்கு முன் பள்ளிக்கு முந்தையக் கட்ட மொழி மேம்பாட்டுத் திட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். பாடசாலைகளில் சலுகைகள் மாறுபடலாம்; விளையாட்டுக் குழுக்கள், பகல்நேரப் பராமரிப்பு மையங்கள் அல்லது நாள் குடும்பங்கள் ஆகியவை சாத்தியமான சலுகைகளாகும். மொழி மட்டத்தை நிர்ணயம் செய்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் பள்ளி நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

மேலும் தகவலுக்கு, இங்கே பார்க்கவும்:
av.tg.ch → Themen → Selektives Obligatorium Vorschulische Sprachförderung

குழந்தை பருவ ஆரம்ப கல்வி மற்றும் ஆதரவு வழங்குதல்
பேச்சு சிகிச்சை, அசைவுகளுக்கான பயிற்சி, அல்லது பாடசாலையில் ஊனமுற்ற அல்லது விவேகம் குறைவான பிள்ளைகளுக்கான சிறப்புக் கல்வி போன்ற பல்வேறு ஊக்குவிப்பு மற்றும் ஆதரவு சலுகைகள் பள்ளிக்கு முந்தையக் கட்ட வயது குழந்தைகளுக்கு கிடைக்கின்றன.



# தொடக்கப்பள்ளி

வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான அடித்தளங்கள்

தொடக்கப் பள்ளி பதினொரு ஆண்டுகள் நீடிக்கும். இது மழலையர் பள்ளி, முதநிலைப் பள்ளி மற்றும் மேல்நிலை பள்ளி என பிரிக்கப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளியில் கலந்துகொள்வது கட்டாயமானது மற்றும் இலவசமாகும்..

மழலையர் பள்ளி

மழலையர் பள்ளி இரண்டு ஆண்டுகள் நீடிக்கும். குழந்தைகளின் வளர்ச்சியை மழலையர் பள்ளி பல்துறை முழுவதும் சார்ந்து மற்றும் விளையாட்டுத்தனமான முறையில் குழந்தைகளின் வளர்ச்சியை ஆதரிக்கிறது. அவர்கள் முதநிலைப் பள்ளியில் தொழில்நுட்பக் கற்றலுக்குத் தயாராக உள்ளனர். குழந்தை மழலையர் பள்ளியில் நுழையும் போது, குழந்தையின் வயது 4 ஆக இருக்கும். பெற்றோர்கள் மழலையர் பள்ளி யில் சேர்ப்பதை ஒரு வருடம் வரை தள்ளி வைக்கலாம். பெற்றோர்கள் தாங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள பள்ளியில் இருந்து பள்ளி தொடங்குவது பற்றிய அனைத்து
முக்கிய தகவல்களையும் பெறுகிறார்கள்.

துண்டறிக்கை: Unser Kind kommt in den Kindergarten – Tipps für Eltern

முதன்மை நிலை

முதநிலைப் பள்ளி ஆறு ஆண்டுகள் நீடிக்கும். முதநிலைப் பள்ளியில், மாணவர்கள் மொழிகள், கணிதம், "இயற்கை, மக்கள், சமூகம்", வடிவமைப்பு, இசை, "உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு" மற்றும் "ஊடகம் மற்றும் கணினி அறிவியல்" மற்றும் "நிலையான வளர்ச்சிக்கான கல்வி" ஆகிய துறைகளில் சிறப்பு அறிவு மற்றும் திறன்களைப் பெறுகிறார்கள். " கூடுதலாக, தனிப்பட்ட, முறைப்படியான மற்றும் சமூக திறன்கள் வளர்க்கப்படுகின்றன.

துண்டறிக்கை: Unser Kind kommt in die Schule – Tipps für Eltern

இடைநிலைக் கல்வி

இடைநிலை பள்ளி மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கும். முதநிலைப் பள்ளியில் பெற்ற அறிவு மற்றும் திறன்களை மாணவர்கள் விரிவுபடுத்தி ஆழப்படுத்துகிறார்கள். மேலும், "இயற்கை மற்றும் தொழில்நுட்பம்" மற்றும் "பொருளாதாரம், வேலை, வீட்டுவேலைகள்" போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்கள் வழங்கப்படுகின்றன. மேல்நிலைப் பள்ளியானது மாணவர்களை அடிப்படை தொழிற்பயிற்சி அல்லது மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்குத் தயார்படுத்துகிறது. மேல்நிலைப் பள்ளி இரண்டு வகைகளாக (அடிப்படை மற்றும் மேம்பட்ட கோரிக்கைகள்) மற்றும் வெவ்வேறு நிலைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. பள்ளிகள் செயல்திறன் நிலைகளுக்கு இடையே ஊடுருவலை உறுதி செய்கின்றன.

துர்காவ் தொடக்கப்பள்ளியின் பாடத்திட்டம்

மாணவர்கள் என்ன தெரிந்து கொள்ள வேண்டியவை மற்றும் என்ன செய்ய முடியும்என்பதை பாடத்திட்டம் விவரிக்கிறது. 1வது சுழற்சியில் மழலையர் பள்ளி மற்றும் முதநிலைப் பள்ளியின் முதல் இரண்டு ஆண்டுகள் (2 ஆம் வகுப்பு முடியும் வரை) அடங்கும். 2வது சுழற்சியானது நான்கு வருட முதநிலைப் பள்ளி (3 முதல் 6 ஆம் வகுப்பு வரை) கொண்டுள்ளது மற்றும் 3 ஆம் சுழற்சி மேல்நிலைப் பள்ளியின் மூன்று வருடங்களை (1 முதல் 3 ஆம் வகுப்பு வரை) கொண்டுள்ளது.

மேலும் தகவலுக்கு, இங்கே பார்க்கவும்:
tg.lehrplan.ch

பள்ளி ஆண்டு மற்றும் விடுமுறை

கோடை விடுமுறைக்குப் பிறகு பள்ளி ஆண்டு தொடங்குகிறது. 13
வார விடுமுறை பள்ளி ஆண்டு முழுவதும் பரவியுள்ளது. விடுமுறை அட்டவணை av.tg.ch இல் கிடைக்கிறது.



## பள்ளியின் அமைவிடம் மற்றும் பள்ளிக்கு செல்லும் வழி

மாணவர்கள் தாங்கள் வசிக்கும் இடத்தில் உள்ள தொடக்கப்பள்ளியில் படிக்கின்றனர். தனிப் பள்ளிக் கட்டிடங்களை ஒதுக்குவது பள்ளி நிர்வாகத்தின் பொறுப்பாகும். பள்ளி நிர்வாகத்தால் வகுப்புகள் பிரிக்கப்படுகின்றன. அடிப்படையில், குழந்தை சுயாதீனமாக பள்ளிக்கு செல்வார்கள். பள்ளிக்குச் செல்லும் வழி சட்டப்பூர்வ பாதுகாவலர்களின் பொறுப்பாகும். வழித்தடங்கள் முடிந்தவரை பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதில் பள்ளி நிர்வாகம் உறுதிபூண்டுள்ளது.

## பாட நேரங்கள் (தொகுதி நேரங்கள்) மற்றும் தினசரி கட்டமைப்புகள்

குழந்தைகளுக்கு மழலையர் பள்ளியில் காலையில் குறைந்தது மூன்று மணிநேரமும், தொடக்கப்பள்ளியில் குறைந்தது மூன்றரை மணிநேரமும் பாடநேரங்கள் எடுக்கப்படும். பள்ளிகள் மதிய உணவு நேரத்தையும், மதிய பாடநேரங்களையும் வித்தியாசமாக ஒழுங்குபடுத்துகின்றன. மழலையர் பள்ளி மற்றும் முதனிலைப் பள்ளிகளில் புதன்கிழமை மதியம் பாடங்கள் நடைபெறாது. பல பாடசாலைகளில் தினசரி கட்டமைப்புகள் உள்ளன (பிள்ளைகளை கவனிக்கும் நேரம், வீட்டுப்பாடம், மதிய உணவு போன்றவை). குழந்தை பராமரிப்பு சேவைகள் பொதுவாக கட்டணத்திற்கு உட்பட்டது.

## வீட்டுப் பாடம்

மாணவர்கள் பள்ளியில் கலந்தாலோசித்ததை மீண்டும் நினைவூட்டி வீட்டுப்பாடத்தை செய்கிறார்கள் மற்றும் கருத்தூன்றி படிக்கின்றனர். பள்ளியில் எந்தெந்த தலைப்புகளில் வேலை செய்துமுடிக்கப்படுகிறது என்பதைப் பற்றிய நுண்ணறிவு இதன்மூலம் பெற்றோர்கள் வழங்கப்படுகின்றனர்.

துண்டறிக்கை: Hausaufgaben – Tipps für Eltern

## சான்றொப்பம் மற்றும் மதிப்பீடு

முதநிலைப் பள்ளி முதல், மாணவர்களின் பாடச் செயல்திறன் வார்த்தைகளால் (1வது/2வது ஆரம்ப வகுப்பு) அல்லது கிரேடுகளால் (3வது ஆரம்ப வகுப்பிலிருந்து) மதிப்பிடப்படுகிறது. மேலும், கற்றல், வேலை மற்றும் சமூக நடத்தை மதிப்பீடு செய்யப்படுகிறது. வகுப்பு ஆசிரியருடன் ஒவ்வொரு ஆண்டும் ஆய்வு நடத்தப்படுகிறது. மாணவர்கள் பள்ளி ஆண்டின் இறுதியில் (முதநிலைப் பள்ளி) அல்லது ஒவ்வொரு செமஸ்டர் முடிவிலும் (மேல்நிலைப் பள்ளி) சான்றிதழைப் பெறுகிறார்கள்.

பெற்றோருக்கான துண்டறிக்கை (ஜெர்மன் மற்றும் பன்னிரண்டு மொழிகளில்)
விளக்க வீடியோ: Fördern und Beurteilen in der Volksschule

## குழந்தை பருவ ஆரம்ப கல்வி மற்றும் ஆதரவு வழங்குதல்

ஒவ்வொரு குழந்தையும் அவரவர் திறமை மற்றும் தேவைக்கேற்ப பள்ளியில் ஊக்குவிக்கப்படுகிறார்கள். சிறப்புத் தேவைகள் அல்லது குறிப்பிட்ட வலிமைகள் மற்றும் திறமைகளைக் கொண்ட மாணவர்களுக்கு பல்வேறு ஆதரவு விருப்பங்கள் உள்ளன. அந்தந்த இடத்து சலுகை பாடசாலையின் ஆதரவுக் கருத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

முதநிலைப் பள்ளி யின் 3 ஆம் வகுப்பிலிருந்து, குறிப்பாக திறமையான மற்றும் செயல்திறன் படைத்த மாணவர்களுக்கு கன்டோனல் சலுகையும் உள்ளது. அவர்கள் வகுப்பு நேரத்தில் ஆக்கு-அரங்கங்களுக்குச் செல்கிறார்கள் அல்லது உந்துவிசை சலுகைகளுடன் வகுப்பிற்கு வெளியே தங்கள் ஆர்வங்களை ஆழப்படுத்தலாம். பயணச் செலவுகளைத் தவிர இரண்டு சலுகைகளும் இலவசம்.

மேலும் தகவலுக்கு, இங்கே பார்க்கவும்:
bbf.tg.ch

## விசேஷப் பயிற்சி

உடல், மன அல்லது பேசுவதில் குறைபாடுகள் அல்லது நடத்தை பிரச்சனைகள் உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களை ஆதரிக்க சிறப்பு சலுகைகள் உள்ளன. முடிந்தால், அவர்கள் வசிக்கும் இடத்திலுள்ள பள்ளியில் படிக்கிறார்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சிறப்புப் பள்ளி மூலம் வழக்கமான வகுப்பில் ஆதரிக்கப்படுவார்கள். இதனை செயல்படுத்துவது குறித்து பள்ளி நிர்வாகம் முடிவு செய்கிறது. வழக்கமான வகுப்பில் ஆதரவு சாத்தியமில்லை என்றால், குழந்தை ஒரு சிறப்புப் பள்ளியில் படிப்பார். சிறப்புப் பள்ளிகள் சில வகையான குறைபாடுகளில் அல்லது கற்றலில் மற்றும் நடத்தையில் சிக்கல்களில் நிபுணத்துவம் பெற்றவை.

## பெற்றோரின் உரிமைகள் மற்றும் கடமைகள்

தங்கள் குழந்தைகளின் வழக்கமான பள்ளி வருகைக்கு பெற்றோர்கள் பொறுப்பு. ஆசிரியருடன் நன்றாக ஒத்துழைப்பது குழந்தை பள்ளியில் வசதியாக இருக்க உதவுகிறது. குழந்தையின் நடத்தை மற்றும் செயல்திறன் பற்றிய அடிக்கடி பரிமாற்றம் செய்வது மற்றும் ஆசிரியர்கள் பெற்றோரோடு பழகுவதற்காக பள்ளி ஏற்பாடு செய்யும் கூட்டங்கள் மற்றும் பிற பள்ளி நிகழ்வுகளில் பங்கேற்பது உதவியாக இருக்கும். ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து வகுப்புகளில் கலந்துகொள்ள பெற்றோருக்கு உரிமை உண்டு.

## தொடர்பு தகவல்

பள்ளியைப் பற்றிய கேள்விகளுடன் பெற்றோரின் தொடர்பு கொள்ள வேண்டிய முதல் நபர் ஆசிரியர் ஆவார். தொடக்கப்பள்ளிகளுக்கான அலுவலகத்தின் இணையதளத்தில் பொதுவான தகவல்களைக் காணலாம்:
av.tg.ch



# இடைக்கால சலுகைகள் / ஒருங்கிணைப்பு படிப்புகள்

ஒரு வேலையைஅல்லது
மேல்நிலைப் பள்ளியை தொடங்க தொடக்க உதவி

தெளிவற்ற தொழில் அபிலாஷைகள் அல்லது இணைப்பு தீர்வு இல்லாத இளைஞர்களுக்கு மற்றும் தங்கள் இடம்பெயர்வு பின்னணி காரணமாக கல்வி இடைவெளி உள்ள இளைஞர்கள் மற்றும் வாலிபர்களுக்கு. பல்வேறு சலுகைகள் உள்ளன. இவைகள் தொழில்முறை அடிப்படை கல்விக்காக அல்லது மேல்நிலைப் பள்ளிக்குச் செல்வதற்குத் உதவியாக உள்ளன.

## இடைக்கால சலுகைகள்

ஒரு ஆயத்த ஆண்டில், இளைஞர்கள் தங்கள் பள்ளி அடிப்படை அறிவை மற்றும் தங்களின் தனிப்பட்ட திறன்களை ஆழப்படுத்த முடியும். அவர்கள் தங்கள் தொழில் தேர்வு செயல்பாட்டில் திட்டவட்டமாக ஆதரவைப் பெறுகிறார்கள். கன்டோனல் சலுகையானது, கல்விசார் முக்கியத்துவம் (வகை A) கொண்ட இடைக்கால சலுகைகளையும் நடைமுறை நோக்குநிலை(வகை P) கொண்ட இடைக்கால சலுகைகளையும் வேறுபடுத்துகிறது.

கால அளவு
1 வருடம்

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
பின்வரும் இணையதளத்தில் உள்ள வழிகாட்டுதல்களில் காணலாம்:
abb.tg.ch → Schulische Bildung → Brückenangebote

பதிவு காலக்கெடு
பிப்ரவரி முதல் ஏப்ரல் 20 வரை

கூடுதல் தகவல்களை அந்தந்த பள்ளிகளின் இணையதளங்களில் காணலாம்:

- பள்ளிக் கல்வி வயின்ஃபெல்டன் (Weinfelden)
  gbw.ch → Brückenangebote
- பள்ளிக் கல்வி ஃப்ரவன்ஃபெல்ட் (Frauenfeld)
  bztf.ch → Brückenangebote
- பள்ளிக் கல்வி ரோமன்ஸ்ஹார்ன் (Romanshorn)
  sbw.edu → Bildungsangebot → SBW Brückenangebot

தொடர்பு கொள்ளவும்
Amt für Berufsbildung und Berufsberatung, Schulische Bildung,
Aufnahmestelle Brückenangebote, Grabenstrasse 5, 8510 Frauenfeld
தொலைபேசி 058 345 59 99
abb.tg.ch → Schulische Bildung → Brückenangebote

## கன்டோனல் ஒருங்கிணைப்பு படிப்புகள்

துர்காவ் மாகாணத்தில் வசிக்கும் வெளிநாட்டு மொழி பேசும் இளைஞர்களுக்காக துர்காவ் கான்டோன் ஒருங்கிணைப்பு படிப்புகளை நடத்துகிறது. ஜெர்மன் மொழி மற்றும் பொதுக் கல்வி கற்பிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இது மேல்நிலைப் பள்ளியில் சேர்வதற்கும்பயிற்சியை (EBA அல்லது EFZ) முடிப்பதற்கும் அல்லது மேல்நிலைப் பள்ளியில் சேருவதற்கும் நிபந்தனை நிலையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. படிப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது மற்றும் ஊடுருவக்கூடியவை. ஜெர்மன் மொழியில் ஒருங்கிணைப்பு பாடத்தின் அடுத்த உயர் நிலையை அடைந்தவுடன், நீங்கள் அதற்கு மாறலாம்.

### ஒருங்கிணைப்பு பாடநெறி 1A

சில மேல்நிலைப் பள்ளிகள் 12-16 வயதுடையவர்களுக்கு முன்கூட்டியே ஒருங்கிணைப்புப் பாடம் 1a (ஒருங்கிணைப்பு வகுப்பு)ஐ வழங்குகின்றன. வழக்கமான மேல்நிலைப் பள்ளியில் சேருவதற்கான தயார் செய்யப்படும் ஜெர்மன் வகுப்பு பயிற்சி தான் பாடத்தின் உள்ளடக்கம்.

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
வயது: 12–16 வயது ஜெர்மன் நிலை: GER 0 அல்லது A1

கால அளவு
அதிகபட்சம் 1 வருடம்; வாரத்தில் 5 நாட்கள்

செலவுகள்
பாடசாலையால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

தொடர்பு தகவல்
Amt für Volksschule, Spannerstrasse 31, 8510 Frauenfeld
தொலைபேசி 345 57 70
av.tg.ch → Themen → Integrationskurse

### ஒருங்கிணைப்பு பாடநெறி 1B

ஒருங்கிணைப்பு பாடநெறி 1b குறிப்பாக ஜெர்மன் மொழியைக் கற்றுக்கொள்வது மற்றும் அன்றாட வாழ்க்கையைச் சமாளிப்பது ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
வயது: 17 - 34 வயது ஜெர்மன் நிலை: GER 0 அல்லது A1

கால அளவு
அதிகபட்சம் 2 ஆண்டுகள்; வாரத்திற்கு 8 அரை நாட்கள்

செலவுகள்
ஒரு செமஸ்டருக்கு CHF 1,000

தொடர்பு தகவல்
Amt für Berufsbildung und Berufsberatung, Schulische Bildung,
Aufnahmestelle Integrationskurse, Grabenstrasse 5, 8510 Frauenfeld
தொலைபேசி 345 56 91
abb.tg.ch → Schulische Bildung → Integrationskurse

## ஒருங்கிணைப்பு பாடநெறி 2

ஒருங்கிணைப்பு பாடநெறி 2 ஒருங்கிணைப்பு பாடநெறி 1b ஐப் பின்பற்றுகிறது மற்றும் குறிப்பாக ஜெர்மனையும் இரண்டாம் நிலை I இன் பாடத்திட்டத்தையும் கற்பிக்கிறது.

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
வயது: 17-34 வயது ஜெர்மன் நிலை: GER A2

கால அளவு
அதிகபட்சம் 1 வருடம்; வாரத்திற்கு 8 அரை நாட்கள்

செலவுகள்
ஒரு செமஸ்டருக்கு CHF 1,000

தொடர்பு கொள்ளவும்
Amt für Berufsbildung und Berufsberatung, Schulische Bildung,
Aufnahmestelle Integrationskurse, Grabenstrasse 5, 8510 Frauenfeld
தொலைபேசி 345 56 91
abb.tg.ch → Schulische Bildung → Integrationskurse

## ஒருங்கிணைப்பு பாடநெறி 3

ஒருங்கிணைப்பு பாடநெறி 3 ஒருங்கிணைப்பு பாடநெறி 2 ஐ தொடர்கிறது. இது உங்களை கல்வி ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் தொழில் பயிற்சிக்காக அல்லது மேல்நிலைப் பள்ளியில் சேர்வதற்காக உங்களை தயார்படுத்துகிறது.

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
வயது: 17 வயது முதல் ஜெர்மன் நிலை: GER B1

கால அளவு
6 மாதங்கள் முதல் 1 வருடம் வரை; வாரத்தில் 5 நாட்கள்

செலவுகள்
வேலையின்மை காப்பீடு வழங்கப்படும்.

தொடர்பு தகவல்
தொடர்புடைய பிராந்திய அலுவலகம் RAV,
rav.tg.ch → über uns → RAV Thurgau



## தொழில்முறை அடிப்படை கல்வி

தொழில் பயிற்சி

அடிப்படைத் தொழில் பயிற்சி என்பது வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான அடிப்படை மற்றும் பல தொழில் வாய்ப்புகளை வழங்குகிறது. மூன்றில் இரண்டு பங்கு இளைஞர்கள் கட்டாயப் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு இந்தப் பாதையைத் தேர்வு செய்கிறார்கள். துர்காவ்வின் பொருளாதாரம், பயிற்சியை வழங்குவதில் மிகுந்த விருப்பத்துடன் இருப்பதால், பரந்த அளவிலான கல்வி வாய்ப்புகளை உறுதி செய்கிறது. இளைஞர்கள் ஒரு தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பணிபுரிகிறார்கள் மற்றும் ஒரு தொழிற்கல்வி பள்ளியில் வகுப்புகளுக்குச் செல்கிறார்கள். கூடுதலாக, நிறுவனங்களுக்கு இடையேயான படிப்புகள் நடத்தப்படுகின்றன. ஃபெடரல் சான்றிதழுடன் (EFZ) அல்லது ஃபெடரல் தொழிற்கல்விச் சான்றிதழுடன் (EBA) அடிப்படைத் தொழிற்பயிற்சி நிறைவுறுகிறது.

கால அளவு
ஃபெடரல் தொழிற்கல்வி சான்றிதழுடன் (EBA) அடிப்படை தொழிற்பயிற்சி இரண்டு ஆண்டுகள் நீடிக்கும்; கூட்டாட்சியுடன் அடிப்படை தொழிற்பயிற்சி தகுதிச் சான்றிதழ் (EFZ) மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் நீடிக்கும்.

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
செல்லுபடியாகும் பயிற்சி ஒப்பந்தம்

தொழிற்பயிற்சிகள்
தொழிற்பயிற்சி பற்றிய தகவல்களை பின்வரும் இணையதளத்தில் காணலாம்:
berufsberatung.ch

தொடர்பு தகவல்
தொழில் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டுதலுக்கான அலுவலகம், ஃப்ரான்ஃபெல்ட், க்ரூஸ்லிங்கன் மற்றும் அம்ரிஸ்வில் ஆகிய இடங்களில் உள்ள தொழில்சார் தகவல் மையங்கள்
abb.tg.ch → Berufs- und Studienberatung BIZ
abb.tg.ch → Bildungszentren

## கூட்டரசு தொழிற்கல்வி இளநிலை பட்டப்படிப்பு

தொழிற்கல்வி பேக்கலரேட் தொழிற்பயிற்சிக்கு துணைபுரிகிறது மற்றும் கோரும், நீட்டிக்கப்பட்ட பொதுக் கல்வியை உள்ளடக்கியது. மூன்று அல்லது நான்கு வருட அடிப்படைத் தொழிற்பயிற்சியின் ஃபெடரல் சான்றிதழுடன் (EFZ) சேர்ந்து, தொழிற்கல்வி இளங்கலையானது, தேர்வை எடுக்காமலேயே பயன்பாட்டு அறிவியல் பல்கலைக்கழகத்தில் (FH) நுழைய உங்களை அனுமதிக்கிறது. தொழிற்பயிற்சியின் போது (BM1) அல்லது அடிப்படை தொழிற்பயிற்சியை முடித்த பிறகு (BM 2) தொழிற்கல்வி இளங்கலை பட்டத்தை முடிக்க முடியும்.

கூடுதல் தகவல்களை அந்தந்த பள்ளியின் இணையதளத்தில் காணலாம்:
- Weinfelden வணிக கல்வி மையம்
  bzww.ch → Grundbildung
- ஃப்ரான்ஃபெல்ட் தொழில்நுட்பத்திற்கான பயிற்சி மையம்
  bztf.ch → Berufsmaturität

தொடர்பு தகவல்
தொழிற்பயிற்சிமற்றும் தொழில்சார் ஆலோசனை அலுவலகம், பள்ளிக் கல்வி,
Grabenstrasse 5, 8510 Frauenfeld, தொலைபேசி 058 345 59 30
abb.tg.ch → Schulische Bildung → Berufsmaturität

## கணினி அறிவியல் நடுநிலைப்பள்ளி

கணிதம் மற்றும் கணினிக் கல்லூரியில் (IMS) படிப்பது என்பது தொழிற்கல்வி இளங்கலை வகுப்புகளுடன் சேர்ந்து பள்ளி சார்ந்த அடிப்படை தொழிற்பயிற்சியை உள்ளடக்குவதாகும். EFZ கணினி விஞ்ஞானி மற்றும் தொழில்சார் இளங்கலை பட்டம் "வணிகம் மற்றும் சேவைகள், வகை வணிகம்" ஆகிய இரண்டும் பெறப்படுகின்றன.

மற்ற தகவல்களை பள்ளியின் இணையதளத்தில் காணலாம்:
- வணிக இளங்கலை பட்டத்துடன் கணிதம் மற்றும் கணினிக் கல்லூரி (IMS)
  kanti-frauenfeld.ch → Informatikmittelschule

தொடர்பு தகவல்
Amt für Mittel- und Hochschulen, Grabenstrasse 11, 8510 Frauenfeld
தொலைபேசி 345 58 30
amh.tg.ch

## மாகாண தொழிற்பயிற்சி

### குறைந்த பட்ச தொழிற் பயிற்சி சலுகைகள் (NAB)

கட்டாயப் பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் மற்றும் அடிப்படைத் தொழில் பயிற்சிக்கு (EBA அல்லது EFZ) தேவையான முன்நிபந்தனைகள் இல்லாத துர்காவ் மாகாணத்தைச் சேர்ந்த 15-18 வயதுடைய தூண்டப்பட்ட இளைஞர்கள்களுக்கு தொழிற் பயிற்சி சலுகைகள் (NAB) கிடைக்கக்கூடியதாக இருக்கிறது.

தொடர்பு தகவல்
Amt für Berufsbildung und Berufsberatung, Schulische Bildung,
Grabenstrasse 5, 8510 Frauenfeld, தொலைபேசி 058 345 56 91
abb.tg.ch → Schulische Bildung → niederschwelliges Ausbildungsangebot

### குறைந்த பட்ச ஒருங்கிணைப்பு தொழிற்பயிற்சி (NIA)/ தொழிற்பயிற்சிக்கு முந்தைய ஒருங்கிணைப்பு (INVOL+)

குறைந்தபட்ச ஒருங்கிணைப்புப் பயிற்சி (என்ஐஏ) குறைந்தபட்ச தொழிற்பயிற்சி சலுகையை (என்ஏபி) சார்ந்திருக்கிறது மற்றும் கன்டோன் ஒருங்கிணைப்பு படிப்புகள் பொருந்தாத 18 வயதுள்ள மற்றும் அதற்கு மேற்பட்ட வெளிநாட்டு மொழி நபர்களை இலக்காகக் கொண்டது. இரண்டாம் ஆண்டு தொழிற்பயிற்சியில், சில நிபந்தனைகளின் கீழ் ஒரு ஒருங்கிணைப்புக்கு முந்தைய பயிற்சியில் (INVOL+) கலந்து கொள்ளலாம்.

தொடர்பு தகவல்
Amt für Berufsbildung und Berufsberatung, Schulische Bildung,
Grabenstrasse 5, 8510 Frauenfeld, தொலைபேசி 058 345 56 91
abb.tg.ch → Schulische Bildung → niederschwellige Integrationsausbildung/ Integrationsvorlehre (INVOL+)

# இளங்கலை பள்ளிகள்

ETH, பல்கலைக்கழகம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் படிப்பதற்கான பாதை

இளங்கலை பள்ளிகள் ETH, பல்கலைக்கழகம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படிக்கத் தக்கதாக தயாராக்குகின்றன. பலதொழில்நுட்பப் பயிலகத்தில் குறிப்பிட்ட வழிகளைச் சென்றடைய, முதுகலைப் படிப்பு உதவுகிறது. தொழில்நுட்ப பள்ளி சான்றிதழ் உயர் தொழில்நுட்பப் பள்ளிகளுக்கு செல்ல அனுமதிக்கிறது.

## உயர்நிலை இளங்கலை பள்ளிகள்

இளங்கலைப் பள்ளிகள் ஒரு நல்ல கல்வி பின்னணியை வழங்குகின்றன மற்றும் பல்கலைக்கழகப் படிப்புகளுக்குத் தயாராகின்றன. இந்த தொழிற்பயிற்சி சுவிட்சர்லாந்தால் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலை பட்டப்படிப்புடன் நிறைவுபெறுகிறது, இது சுவிட்சர்லாந்திலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் (பல்கலைக்கழகங்கள், சுவிஸ் கூட்டாட்சி தொழில்நுட்ப கல்லூரிகள்), ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகங்களிலும், ஒரு வருட இன்டர்ன்ஷிப்பிற்குப் பிறகு, பலதொழில்நுட்பப் பயிலகங்களிலும் படிக்க அனுமதிக்கும்.

ஒவ்வொரு பள்ளிக்கும் சிறப்பு சலுகைகள் உள்ளன:
- ஃப்ரவென்ஃபெல்ட், க்ரோய்ட்ஸ்லிங்கன், ரோமன்ஸ்ஹார்ன், வில்லில் உள்ள கன்டோன் பள்ளிகளில் ஆங்கிலத்தில் இருமொழி உயர்நிலைப் பள்ளி டிப்ளமோ
- ஃப்ரவென்ஃபெல்ட் கன்டோன் பள்ளியில் பிரெஞ்சு மொழியில் இருமொழி உயர்நிலைப் பள்ளி டிப்ளமோ
- ரோமன்ஸ்ஹார்ன் கன்டோன் பள்ளியில் பிரெஞ்சு அல்லது இத்தாலிய மொழியில் இருமொழி உயர்நிலைப் பள்ளி டிப்ளமோ
- ஆர்வமுள்ளவர்களுக்கு க்ரோய்ட்ஸ்லிங்கன் கன்டோன் பள்ளியில் MINT வகுப்பு கணிதம், கணினியியல் மற்றும் இயற்கை அறிவியல்
- கற்பிக்கும் பணியில் ஆர்வமுள்ளவர்களுக்கான ஒருங்கிணைந்த தொழிற்பயிற்சியுடன் கூடிய கல்வியியல் இளங்கலைப் பள்ளி
- விளையாட்டு, கலை மற்றும் இசை ஆகிய துறைகளில் அதிக செயல்திறன் கொண்ட, திறமையான மாணவர்களுக்காக க்ரோய்ட்ஸ்லிங்கனிலுள்ள கல்வியியல் இளங்கலைப் பள்ளியில் கலை வகுப்பு மற்றும் விளையாட்டு வகுப்பு
- ரோமன்ஸ்ஹார்ன் கன்டன் பள்ளியில் மதுரா டேலன்டா

கூடுதல்தகவல்களை அந்தந்த பள்ளியின் இணையதளத்தில் காணலாம்:
- ஃப்ரவென்ஃபெல்ட்டில் உள்ள கன்டோன் பள்ளி
  kanti-frauenfeld.ch → Gymnasium
- மண்டலப் பள்ளி க்ரோய்ட்ஸ்லிங்கன்
  ksk.ch → Angebot → Bildungsangebot
- ரோமன்ஸ்ஹார்ன் கன்டன் பள்ளி
  ksr.ch → Gymnasiale Maturitätsschule
- க்ரோய்ட்ஸ்லிங்கனில் கல்வியியல் இளங்கலைப் பள்ளி
  pmstg.ch → Matura mit Berufsbildung
- மாகாணப் பள்ளி வில்
  (ஹின்டர்துர்காவ் மாணவர்களுக்காக)
  kantiwil.ch → Gymnasium

தொடர்பு கொள்ளவும்
Amt für Mittel- und Hochschulen, Grabenstrasse 11
8510 Frauenfeld, தொலைபேசி 058 345 58 30
amh.tg.ch → Mittelschulen

## துர்காவ்-ஷாஃப்ஹவுசர் பெரியவர்களுக்கான இளங்கலை பள்ளி

தேவையான முன்நிபந்தனைகள் உள்ளவர்கள், பெரியவர்களுக்கான Turgauisch-Schaffhauserische Maturaschule இல் (TSME) பணிபுரியும் போது உயர்நிலைப் பள்ளி டிப்ளோமாவைப் பெறலாம் அல்லது பசரெல் (தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கான துணைத் தேர்வு)படிப்பில் கலந்துகொண்ட பிறகு துணைத் தேர்வில் பங்கேற்கலாம்.

### பெரியவர்களுக்கான உயர்நிலைப் பள்ளி டிப்ளமோ

கால அளவு
7 செமிஸ்டர்கள்

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
முதல் செமிஸ்டருக்கான சேர்க்கையை பொதுவாக மேல்நிலைப் பள்ளி டிப்ளமோ (நீட்டிக்கப்பட்ட நிலை) மற்றும் குறைந்தபட்சம் இரண்டு வருட தொழில்முறை அனுபவத்திற்கான ஆதாரத்தை காண்பிக்கக்கூடிய எவரும் பெற்றுக்கொள்ளலாம். கற்றல், பயிற்சி, நிரூபிக்கப்பட்ட வேலையின்மை, குடும்பம் மற்றும் குழந்தை பராமரிப்பு ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.
உயர் செமிஸ்டர் (2வது முதல் 6வது செமிஸ்டர்) இரண்டாம் நிலை II இல் (குறைந்தபட்சம் தவறவிட்ட செமிஸ்டர்களின் அளவிற்கு) பொதுப் பள்ளியில் படித்தவர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. பள்ளி வருகை சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும்.

### பசரெல் (தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கான துணைத் தேர்வு)

உயர்-செயல்திறன் கொண்ட தொழிற்கல்வி இளங்கலை மாணவ மாணவிகள் மற்றும் சிறப்பு இளங்கலை மாணவ மாணவிகள் ஒரு வருட முழுநேர பசரெல் படிப்பு செய்யும் போது, பல்கலைக்கழகத்தில் நுழய அனுமதிக்கும் நிறுவனவக, சுவிஸ்-அங்கீகரிக்கப்பட்ட துணைத் தேர்வுக்கு TSME இல் தயாராகலாம்.

கால அளவு
30 வாரங்கள், செப்டம்பர் முதல் ஆகஸ்ட் வரை

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
நல்ல சராசரி தரத்துடன் (குறைந்தபட்சம் 4.7) தொழில்சார் இளங்கலை சான்றிதழ்/நிபுணத்துவ இளங்கலை சான்றிதழ்; சேர்க்கை நேர்காணல்

தொடர்பு தகவல்
துர்காவ்-ஷாஃப்ஹவுசர் பெரியவர்களுக்கான இளங்கலை பள்ளி
Neuhauserstrasse 7, 8510 Frauenfeld, தொலைபேசி 058 345 51 00
tsme.ch → Maturitätsausbildung
tsme.ch → Passerellenkurs

## தொழில்நுட்ப பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி டிப்ளமோ

மேல்நிலைப் பள்ளி டிப்ளமோவிற்கான பொதுவாக இருக்கும் நான்கு வருட பல்கலைக்கழகப் பாடத்தொகுதியானது உடல்நலம், சமூகப் பணி, தகவல் தொடர்பு மற்றும் தகவல் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக படிப்புகளுக்கு உங்களை தயார்படுத்துகிறது. கல்வியியலில் சிறப்பு இளங்கலை பட்டம் பெற்றவர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் படிக்கலாம். நீங்கள் சிறப்பு இளங்கலை பட்டம் எடுக்க விரும்பவில்லையென்றால், நீங்கள் உங்கள் தொழில்நுட்ப பள்ளி சான்றிதழுடன் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு உயர் தொழில்நுட்பப் பள்ளியில் உங்கள் கல்வியைத் தொடரலாம். கல்வியியலில் சிறப்பு இளங்கலை பட்டம் ஃப்ரவென்ஃபெல்ட் கன்டோன் பள்ளியில் வழங்கப்படுகிறது.
ஃப்ரவென்ஃபெல்ட் மற்றும் ரோமன்ஸ்ஹார்ன்னில் உள்ள கன்டோன் பள்ளிகளில் தொழில்நுட்ப பள்ளிகள் உள்ளன.

கூடுதல் தகவல்களை அந்தந்த பள்ளியின் இணையதளத்தில் பார்க்கலாம்:
- ஃப்ரவென்ஃபெல்ட்டில் உள்ள கன்டோன் பள்ளி
  kanti-frauenfeld.ch → Fachmittelschule
- ரோமன்ஸ்ஹார்ன் கன்டோன் பள்ளி
  ksr.ch → Fachmittelschule

தொடர்பு தகவல்
Amt für Mittel- und Hochschulen, Grabenstrasse 11
8510 Frauenfeld, தொலைபேசி 058 345 58 30
amh.tg.ch → Mittelschulen

# உயர் தொழில்முறைக் கல்வி

பணிநிலை பயிற்சி மற்றும் தொழில் வல்லுநர்கள்களின் தனித்திறன் உருவாக்கம்

உயர் தொழிற்கல்வி பயிற்சியானது சவால் மிக்க நிபுணத்துவ செயல்பாடுகள் அல்லது நிர்வாகப் பணி செய்வதற்கு தயாராக்குகிறது. இது நிபுணத்துவத்தை சாத்தியமாக்குகிறது, சிறப்பு திறன்களை ஆழப்படுத்துகிறது மற்றும் நிறுவன நிர்வாகத் தகுதிகளை வழங்குகிறது.

உயர் தொழில்முறைக் கல்வியில் இவை அடங்கும்:
- கூட்டாட்சி தேர்வுகள் (தொழில்முறை தேர்வு BP மற்றும் உயர் தொழில்முறை தேர்வு HFP)
- உயர் தொழில்நுட்ப பள்ளிகளில் (HF) படிப்புகள்

## கூட்டாட்சி தேர்வுகள் – தொழில்முறை தேர்வு BP மற்றும் உயர் தொழில்முறை தேர்வு HFP

தொழில்சார் பரீட்சைகள் தொழில் வல்லுநர்கள் தங்கள் அறிவை ஆழப்படுத்தவும், அடிப்படைத் தொழிற்பயிற்சிப் பிறகு ஒரு தொழிலில் நிபுணத்துவம் பெறவும் உதவுகிறது. ஒரு தொழில்முறை தேர்வை வெற்றிகரமாக முடிப்பது பொதுவாக உயர் நிபுணத்துவ தேர்வில் சேருவதற்கான நிபந்தனையாகும். இது தொழில் வல்லுநர்களை அவர்களின் தொழில்முறை துறையில் நிபுணர்களாகத் தகுதிப்படுத்தி, ஒரு நிறுவனத்தை நடத்துவதற்கு அவர்களைத் தயார்படுத்துகிறது.

கூட்டாட்சி தேர்வுகள் பற்றிய கூடுதல் தகவல்களை கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கானகல்வி, ஆராய்ச்சி மற்றும் மாநில செயலகம் புதுமை SERI இணையதளத்தில் காணலாம்:
sbfi.admin.ch → Bildung → Höhere Berufsbildung → Berufsprüfungen BP und höhere Fachprüfungen HFP

## உயர் தொழில்நுட்ப கல்லூரி

உயர் தொழில்நுட்பப் பள்ளிகளில் படிக்கும் படிப்புகள் உயர் மட்ட நடைமுறை பொருத்தத்தைக் கொண்டுள்ளன. சேவை, நிறுவனம், தொழிற்சாலை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிலிருந்து குறிப்பிட்ட பிரச்சினைகள் முன்னணியில் உள்ளன. உயர் தொழில்நுட்ப பள்ளியில் பட்டதாரிகள் பெரும்பாலும் நடுத்தர மேலாண்மையில் பணியமர்த்தப்படுகிறார்கள்.

துர்காவ் மாகாணத்தில், பின்வரும் உயர் தொழில்நுட்ப கல்லூரி படிப்புகளை படிக்கலாம்:
செவிலியர்களுக்கான உயர் தொழில்நுட்ப பள்ளி, பொருளாதாரத்திற்கான உயர் தொழில்நுட்ப பள்ளி மற்றும் பல்வேறு பயிற்சி வகுப்புகளுடன் தொழில்நுட்பத்திற்கான உயர் தொழில்நுட்ப பள்ளி

### உயர்நிலை செவிலியர் பள்ளி

டிப்ளமோ
டிப்ளமோ பெற்ற பெண் செவிலியர் HF /
டிப்ளமோ பெற்ற ஆண்செவிலியர்

கால அளவு
இரண்டு முதல் நான்கு ஆண்டுகள். படிப்பு 50% பயிற்சி (இன்டர்ன்ஷிப்) நிறுவனத்திலும் 50% உயர் தொழில்நுட்பப் பள்ளியிலும் நடைபெறுகிறது.

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
இரண்டாம் நிலை II (மூன்று அல்லது நான்கு ஆண்டு தொழில் பயில்வு, இடைநிலைப் பள்ளி அல்லது அதற்கு சமமான பயில்வு) இல் முடித்த தொழிற்பயிற்சி.

தொடர்பு தகவல்
சுகாதாரம் மற்றும் சமூக விவகாரங்களுக்கான கல்வி மையம்
Falkenstrasse 2, 8570 Weinfelden, தொலைபேசி 058 345 77 11
bfgs-tg.ch → Tertiäre Bildung

### உயர் தொழில்நுட்ப கல்லூரி HF

டிப்ளமோ
வணிக நிர்வாகத்தில் டிப்ளமோ பெற்ற பெண்HF /
வணிக நிர்வாகத்தில் டிப்ளமோ பெற்ற ஆண்HF

கால அளவு
3 ஆண்டுகள்

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
இரண்டாம் நிலை II (மூன்று அல்லது நான்கு ஆண்டு தொழில் பயில்வு அல்லது இடைநிலைப் பள்ளி) இல் முடித்த தொழிற்பயிற்சி மற்றும் வணிகத் துறையில் குறைந்தது இரண்டு வருட தொழில்முறை அனுபவம். ஆங்கில மொழித் திறன்களைப் பொறுத்தவரை, பொதுவான ஐரோப்பியக் கட்டமைப்பின் மொழி நிலை B1 தேவை.

தொடர்பு தகவல்
Bildungszentrum Wirtschaft, Weiterbildung
Schützenstrasse 11, Postfach 112, 8570 Weinfelden
தொலைபேசி 058 345 75 75
wbbzww.ch → Kursangebot → Wirtschaftsschule → Höhere Fachschulen

### பல்வேறு தொழிற்பயிற்சி வகுப்புகளுடன் கூடிய உயர் தொழில்நுட்ப பள்ளி

டிப்ளமோ
தகுதி வாய்ந்த தொழில்நுட்ப ஆண் வல்லுநர் HF /
தகுதி வாய்ந்த தொழில்நுட்ப பெண் வல்லுநர் HF (பல்வேறு தவகை நிபுணத்துவம்),
டிப்ளமோ பெட்ரா ஆண் வணிக கணினி நிபுணர் HF /
டிப்ளமோ பெட்ரா பெண் வணிக கணினி நிபுணர் HF

கால அளவு
3 ஆண்டுகள்

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
சம்பந்தப்பட்ட தொழில்முறை துறையில் (bztf.ch) அடிப்படை தொழிற்பயிற்சி (மூன்று அல்லது நான்கு வருட பயிற்சி) மற்றும் குறைந்தது இரண்டு வருட தொழில்முறை அனுபவம்; தெளிவுபடுத்தப்பட்ட பின் அதற்கு ஒப்பான தொழில்கள். சம்பந்தப்பட்ட துறையில் பொருத்தமான தொழில்முறை வேலைகளில் குறைந்தபட்சம் 50% வேலை செய்திருத்தல்.

தொடர்பு தகவல்
Bildungszentrum für Technik
Kurzenerchingerstrasse 8, 8500 Frauenfeld, தொலைபேசி 058 345 65 00
bztf.ch → Weiterbildung → höhere Fachschulen und Nachdiplomstudien

## மற்ற உயர் தொழில்நுட்ப பள்ளிகள்

உயர் தொழிற்பயிற்சி வழங்கும் மற்ற உயர் தொழில்நுட்ப பள்ளிகள் துர்காவ் மாகாணத்தில் எளிதில் சென்றடையக்கூடியவையாக உள்ளன. கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான மாநிலச் செயலகத்தின் இணையதளத்தில் கன்டோன் மூலம் HF படிப்புகளின் பட்டியலைக் காணலாம்:
sbfi.admin.ch → Bildung → Höhere Berufsbildung → Berufsverzeichnis → Diplome Höhere Fachschule

# கல்லூரிகள்

சிறந்த தகுதிகளுக்கான ஒரு படிப்புப் பற்றி

சுவிட்சர்லாந்தில் பல்வேறு வகையான உயர்கல்வி நிறுவனங்கள் உள்ளன: பல்கலைக்கழகங்கள், பலதொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் ஆசிரியர் கல்விக்கான பல்கலைக்கழகங்கள்.

முதலில் கூறப்பட்டவைகள் விசேஷமாக அடிப்படை ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன; அவைகளின் பல்கலைக்கழக கற்பித்தலும் அதன் அடிப்படையில் உள்ளது. ஆகையால் அப்படியிருக்க, பலதொழில்நுட்பப் பயிலகங்கள், தொழில்முறை பயிற்சி மற்றும் அதில் பயன்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் அதிக கவனம் செலுத்துகின்றன. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் பல்வேறு பள்ளி நிலைகளுக்கான ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கின்றன, மேலும் மேற்படிப்பு அளிக்கின்றன மற்றும் தொழில்முறை துறைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றன.

## கல்வியியல் பல்கலைக்கழகம் துர்காவ்

கன்டோனில் உள்ள ஒரே பல்கலைக்கழகம் க்ரோய்ட்ஸ்லிங்கனிலுள்ள துர்காவ் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (PHTG)யாகும், அங்கு அனைத்து பள்ளி மட்டங்களுக்கும் ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள், அத்துடன் குழந்தை பருவத் துறையில் நிபுணர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். இரண்டாம் நிலை I மற்றும் II மற்றும் ஆரம்பகால குழந்தைப் பருவத்திற்கான படிப்புகள் கான்ஸ்டன்ஸ் (Konstanz) பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புடன் வழங்கப்படுகின்றன.

### மழலையர் பள்ளி கீழ் நிலை

கால அளவு
மூன்று வருடங்கள் க்ரோய்ட்ஸ்லிங்கனிலுள்ள ஆசிரியர் பயிற்சி இளங்கலை பள்ளியின் பட்டதாரிகளுக்கு இரண்டு ஆண்டுகள்.

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
உயர்நிலை பள்ளி இளங்கலை பட்டம், பசரெல் (தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கான துணைத் தேர்வு)உடன் இளநிலை பட்டப்படிப்பு நிறைவு செய்திருத்தல், தொழில்நுட்பக் கல்லூரியில் பட்டம் பெற்றவர்(நிபந்தனைகளுடன் இருக்கலாம்), கல்வியியலில் சிறப்பு இளங்கலை பட்டம் பெற்றவர். (சேர்க்கை நடைமுறைகள் மூலம் மேலும் அணுகல் சாத்தியமாகும்.)

### முதன்மை நிலை

கால அளவு
மூன்று வருடங்கள் க்ரோய்ட்ஸ்லிங்கனிலுள்ள ஆசிரியர் பயிற்சி இளங்கலை பள்ளியின் பட்டதாரிகளுக்கு இரண்டு ஆண்டுகள்.

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
இளங்கலை பட்டம், பசரெல் (தொழிற்கல்வி பட்டப் படிப்புக்கான துணைத் தேர்வு)உடன் இளநிலை பட்டப்படிப்பு நிறைவு செய்திருத்தல், தொழில்நுட்பக் கல்லூரியில் பட்டம் பெற்றவர்(நிபந்தனைகளுடன் இருக்கலாம்), கல்வியியலில் சிறப்பு இளங்கலை பட்டம் பெற்றவர். (சேர்க்கை நடைமுறைகள் மூலம் மேலும் அணுகல் சாத்தியமாகும்.)

### மேல்நிலைப் பள்ளி

கால அளவு
வழக்கமான படிப்பு 4.5 ஆண்டுகள் முழுநேர படிப்பு
படிப்படியான விரிவாக்கம் 2 ஆண்டுகள் முழுநேர படிப்பு
பகுதி நேர படிப்புகளுக்கான மாறுபட்ட கால அளவு

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
இடைநிலைப் பாடசாலையின் இளங்கலை பட்டம் அல்லது அதற்கு சமமான தகுதி அல்லது ஆரம்பப் பள்ளிக்கான கல்வியியலில் சிறப்பு இளங்கலை பட்டம்

### இரண்டாம் நிலை II

கால அளவு
1 ஆண்டு முழுநேர படிப்பு, 3 ஆண்டுகள் வரை பகுதிநேர படிப்பு

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
சுவிஸ் நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் பாடத்தில் முதுகலை மட்டத்தில் (முதுகலை, டிப்ளமோ, பட்டப்படிப்பு, முதுகலை பட்டம்) பல்கலைக்கழக படிப்புகள்

### முதுநிலை ஆரம்ப குழந்தைப் பருவம்

கால அளவு
2 ஆண்டுகள் முழு நேர படிப்பு, பொதுவாக 3 ஆண்டுகள் பகுதி நேர படிப்பு

பதிவு செய்வதற்கான நிபந்தனைகள்
பல்கலைக்கழகம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அல்லது உளவியல், கல்வி, சமூக அல்லது விளையாட்டுக் கல்வி அல்லது மற்ற பொருத்தமான படிப்புத் துறையில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் இளங்கலைப் பட்டம்.

தனித்தனியாக படிப்புகள் பற்றிய கூடுதல் தகவல்களை துர்காவ் கல்வி பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் காணலாம்:
phtg.ch → Studium

## மற்ற கல்லூரிகள்

சுவிட்சர்லாந்து
துர்காவ் மாகாணம், குறைந்த தூரத்திற்குள் பல்வேறுபட்ட படிப்புகளைக் கொண்ட ஏராளமான பல்கலைக்கழகங்களால் சூழப்பட்டுள்ளது. பிராந்தியத்தில் உள்ள முக்கியமான பல்கலைக்கழகங்கள் OST – Ostschweizer Fachhochschule, மற்றும் மாகாணங்களுக்கு இடையே உள்ள Hochschule für Heilpädagogik (HfH) மற்றும் Zürcher Hochschule für Angewandte Wissenschaften (ZHAW) ஆகும். சுவிட்சர்லாந்தில் உள்ள அனைத்து பல்கலைக்கழகங்கள், பலதொழில்நுட்பப் பயிலகங்கள் மற்றும் ஆசிரியர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் சுருக்கக் குறிப்பை swissuniversities.ch.இல் காணலாம்.

துர்காவ் மாணவர்கள் அனைத்து பல்கலைக்கழகங்களிலும் நுழைய மாகாணங்களுக்கிடையே உள்ள ஒப்பந்தங்கள் உறுதி செய்கின்றன. இந்த ஒப்பந்தங்களின்படி, துர்காவ் மாகாணம் அதன் மாணவர்களுக்கான உதவித்தொகைகளை (பள்ளிக் கட்டணம்) செலுத்துகிறது.

கான்ஸ்டான்ஸ்
கான்ஸ்டான்ஸில் உள்ள Universität Konstanz மற்றும் Hochschule für Technik, Wirtschaft und Gestaltung (HTWG) ஆகியவை துர்காவ் விற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை..

கான்ஸ்டன்ஸ் ஏரியால் இணைக்கப்பட்ட நான்கு நாடுகளின் அறிவியல் சங்கம் (Wissenschaftsverbund Vierländerregion Bodensee)
கான்ஸ்டன்ஸ் ஏரியால் இணைக்கப்பட்ட நான்கு நாடுகளின் அறிவியல் சங்கமானது க்ரோய்ட்ஸ்லிங்கன்னில் இரண்டு அலுவலகங்களில் ஒன்றை நடத்துகிறது. இந்த பல்கலைக்கழக வலையமைப்பில் 25 பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் பரந்த ஏரி கான்ஸ்டன்ஸ் ஏரி பகுதியில் உள்ளன. இது ஒன்றாக, எல்லை தாண்டிய படிப்புகளை உருவாக்குவதன் மூலம் இந்தப் பல்கலைக்கழகங்களுக்கிடையே ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.

## மேற்படிப்பு

வேலை சார்ந்த மற்றும் தனிப்பட்ட மேலும் பயிற்சியுடன் சந்திப்பில் இருங்கள்

எண்ணற்ற கல்வி நிறுவனங்கள் மேற்படிப்பிற்காக பலவிதமான சலுகைகளை வழங்குகின்றன. இவை தொழில் சம்பந்த மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

பல்வேறு மேற்படிப்பு சலுகைகளை - தொழில் சம்பந்தப்பட்ட மேற்படிப்பு முதல் பல்கலைக்கழக சலுகைகள் வயது வந்தோர் கல்வி வரை - பின்வரும் தரவுத்தளத்தில் காணலாம்:
berufsberatung.ch → Aus- und Weiterbildung → Weiterbildung – Kurse, Lehrgänge

# அனைத்து பள்ளி மட்டங்களுக்கும் அதனுடன் கூடிய சலுகைகள்

## பெற்றோர் கல்வி

பெற்றோர் கல்வி என்பது குழந்தைகளுடன் வாழும் தாய் மற்றும் தந்தை, தாத்தா பாட்டி மற்றும் பிற ஆர்வமுள்ள தரப்பினரை இலக்காகக் கொண்டது. பெற்றோர் கல்வி என்பது கல்வியாளர்களின் பணியில் தங்களை பலப்படுத்துகிறது மற்றும் குழந்தைகள் எவ்வாறு வளர்கிறார்கள் மற்றும் இந்த வளர்ச்சியை எவ்வாறு ஆதரிக்கலாம் என்பதைக் காட்டுகிறது. பெற்றோர் கல்வியானது கல்வியாளர்களின் வளங்களை கணக்கில் எடுத்துக்கொள்கிறது மற்றும் கவனமாகவும் மரியாதையுடனும் தொடர்பு கொள்ள முயல்கிறது.

பெற்றோர் அமைப்புகளுக்கான துர்காவ் பணிக்குழு (TAGEO) என்பது பிராந்திய மற்றும் உள்ளூர் பெற்றோர் அமைப்புகளின் கன்டோன் குடை அமைப்பாகும். படிப்புகள் பெற்றோர் கல்வி நாட்காட்டியில் வெளியிடப்பட்டு இணைய பயன்பாட்டில் கிடைக்கும்: kalender.tageo.ch

மேலும் தகவலுக்கு, இங்கே பார்க்கவும்:
elternwissen-tg.ch

## பள்ளி உளவியல் மற்றும் பேச்சு சிகிச்சை

பள்ளி சூழலில் சிரமங்கள் இருந்தால், இலவச பள்ளி உளவியல் அல்லது பேச்சு சிகிச்சை மதிப்பீட்டைப் பயன்படுத்தலாம். குழந்தையின் பலம் மற்றும் பலவீனங்களை எவ்வாறு கையாள்வது என்பதற்கான உதவிக்குறிப்புகள் மற்றும் பொருத்தமான ஆதரவு நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளை பெற்றோரும் பள்ளியும் பெறுகின்றன. இந்த சலுகை குழந்தைகள் மற்றும் 18 வயது வரையுள்ள இளைஞர்களுக்கு பொருந்தும்.

கூடுதல் தகவல்களை தொடக்கப் பள்ளிகளுக்கான அலுவலகத்தின் இணையதளத்தில் காணலாம்:
av.tg.ch → Themen → Abklärung und Beratung, schulpsychologische und logopädische

அம்ரிஸ்வில் பிராந்திய அலுவலகம்
Kirchstrasse 1, 8580 Amriswil, தொலைபேசி 058 345 74 60

பிராந்திய அலுவலகம் Frauenfeld
Grabenstrasse 11, 8510 Frauenfeld, தொலைபேசி 058 345 74 30

பிராந்திய அலுவலகம் Kreuzlingen
Konstanzerstrasse 13, 8280 Kreuzlingen, தொலைபேசி 058 345 74 80

## தொழில் மற்றும் படிப்பு ஆலோசனை

தொழில் மற்றும் படிப்பு ஆலோசனை இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் தொழில் மற்றும் பட்டப்படிப்பைத் தேர்ந்தெடுப்பதில் மற்றும் அவர்களின் தொழில் வாழ்க்கையை வடிவமைப்பதில் தகவல் மற்றும் தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் உதவுகிறது.

மேலும் தகவல்களை தொழில்முறைக் கல்வி மற்றும் தொழில்முறை வழிகாட்டல் அலுவலகத்தின் இணையதளத்தில் காணலாம்:
abb.tg.ch → Berufs- und Studienberatung

தொழில் தகவல் மையங்கள் (BIZ)
தொழில் தேர்வுகள், படிப்புகள் மற்றும் தொழில் தொடர்பான அனைத்து கேள்விகளுக்கும் BIZ தொடர்பு புள்ளியாகும்.

தொடக்க நேரம்
திங்கள்-புதன்கிழமை காலை 8:00 முதல் 11:30 வரை, மதியம் 1:30 முதல் மாலை 5:30 வரை
வியாழன் காலை 8:00 முதல் 11:30 வரை, மதியம் 1:30 முதல் மாலை 6:30 வரை
வெள்ளிக்கிழமை காலை 8:00 முதல் 11:30 வரை, மதியம் 1:30 முதல் மாலை 5:00 வரை

அம்ரிஸ்வில் தொழில் மற்றும் படிப்பு ஆலோசனை
Rütistrasse 7, 8580 Amriswil, தொலைபேசி 058 345 59 80
biz-amriswil@tg.ch

Frauenfeld இல் தொழிற்கல்வி மற்றும் படிப்பு ஆலோசனை
Grabenstrasse 5, 8510 Frauenfeld, தொலைபேசி 058 345 59 55
biz-frauenfeld@tg.ch

Kreuzlingen இல் தொழில் மற்றும் படிப்பு ஆலோசனை
Schützenstrasse 1, 8280 Kreuzlingen, தொலைபேசி 058 345 59 70
biz-kreuzlingen@tg.ch

## கன்டோனில் அல்லாத பள்ளிகளுக்கான பயிற்சி பங்களிப்புகள் மற்றும் பங்களிப்புகள்

மானியங்கள் மற்றும் கடன்கள்
பயிற்சிக்கான நிதிச் சாத்தியங்கள் போதுமானதாக இல்லாவிட்டால், மானியங்கள் மற்றும் கடன்களுடன் மாகாணம் ஆதரவை வழங்க முடியும். உதவித்தொகை பொதுவாக இரண்டாம் நிலை II (பழகுநர் பயிற்சி, நடுநிலைப் பள்ளிகள் போன்றவை) மற்றும் மூன்றாம் நிலை (உயர் தொழில்நுட்ப பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் படிப்பது) ஆரம்பப் பயிற்சிக்காக வழங்கப்படுகிறது. இரண்டாவது பயிற்சிக்கு கடன்கள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பெற்றோர் அல்லது விண்ணப்பதாரரின் நிதி சூழ்நிலைகள் (வரி சான்றிதழ்) கணக்கீட்டிற்கு தீர்க்கமானவை.

மேலும் தகவலுக்கு, பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடவும்:
stipendien.tg.ch

பள்ளி கட்டணம்
பல்வேறு பிராந்திய மற்றும் மாகாணங்களுக்கிடையேயான ஒப்பந்தங்கள், துர்காவ் குடியிருப்பாளர்களுக்கு அனைத்து முக்கிய பயிற்சி வகுப்புகளுக்கும் இலவச அணுகல் இருப்பதை உறுதிசெய்கிறது, அவை மண்டலமே வழங்கவில்லை, எனவே அவை மண்டலத்திற்கு வெளியே உள்ள நிறுவனங்களில் முடிக்கப்பட வேண்டும். பயிற்சியானது சுவிட்சர்லாந்து மற்றும்/அல்லது மாகாணத்தால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டால்,துர்காவ் மாகாணம் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்துகிறது (மாணவர்கள் தாங்களே செலுத்த வேண்டிய செமஸ்டர் கட்டணத்துடன் குழப்பிக்கொள்ள வேண்டாம்). துர்காவ் குடியிருப்பாளர் அவர்கள் இருக்கும் மாகாணத்தில் உள்ள மாணவர்களைக் காட்டிலும் அங்கீகரிக்கப்பட்ட படிப்புக்காக அதிக கல்விக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும் சந்தர்ப்பங்களில், கான்டோனில் ஒப்பிடக்கூடிய சலுகை எதுவும் இல்லை என்றால், கான்டோன் இந்த கூடுதல் செலவுகளைத் திருப்பிச் செலுத்துகிறது.

மேலும் தகவலுக்கு, பின்வரும் இணையதளத்தைப் பார்வையிடவும்:
stipendien.tg.ch

## மேலும் தகவல் மற்றும் தொடர்பு புள்ளிகள்

கல்வி மற்றும் கலாச்சாரத் துறை(DEK)
Regierungsgebäude, 8510 Frauenfeld
தொலைபேசி 345 57 50
dek@tg.ch, dek.tg.ch
சட்டப் புத்தகம் ஆன்லைனில்: rechtsbuch.tg.ch

தொடக்கப் பள்ளிக்கான அலுவலகம் (AV)
Spannerstrasse 31, 8510 Frauenfeld
தொலைபேசி 058 345 57 70
info.av@tg.ch, av.tg.ch

தொழில் பயிற்சி மற்றும் தொழில் ஆலோசனைக்கான அலுவலகம் (ABB)
Grabenstrasse 5, 8510 Frauenfeld
தொலைபேசி 058 345 59 30
abb@tg.ch, abb.tg.ch

Amt für Mittel- und Hochschulen (AMH)
Grabenstrasse 11, 8510 Frauenfeld
தொலைபேசி 058 345 58 30
amh@tg.ch, amh.tg.ch



2023 பதிப்பு